අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/05/67/28/06 (111 වෙළුම)
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.
දිනය / திகதி / Date 2023.10.31

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்/அதிபர்கள்/
பீடாதிபதிகள்/ஆசிரிய அதிபர்கள்/
ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர்கள்,

<u>முதன்மைத் திறனற்ற ஊழியர்கள், முதன்மை அரைத் திறன் கொண்ட ஊழியர்களின் முதன்மை திறன் கொண்ட ஊழியர்களின் வினைத்திறன் தடைதாண்டல் 2023(1) தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்படுதல்</u>

முதன்மைத் திறனற்ற ஊழியர்கள் (PL1) மற்றும் முதன்மை அரைத் திறன் கொண்ட ஊழியர்களின் (PL2) வினைத்திறன் தடைதாண்டல் 2023(1) பரீட்சை தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதன் பிரகாரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவம் 02 க்கு அமைவாக தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பங்களை முன்னிலைப்படுத்துமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

02. அதற்குரிய பாடத்திட்டங்கள் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமையும். முந்தைய வருடங்களில் நடாத்தப்பட்ட வினைத்திறன் தடைதாண்டலில் தேர்ச்சியடையாத மற்றும் அச்சந்தர்ப்பத்தில் தோற்றத்தவறிய ஊழியர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம். மேலும் தரமுயர்த்தப்பட்ட பதவியுயர்வு பெற்ற ஊழியர்களுக்கு தாம் பதிவியுயர்வு பெற்ற தரத்திற்குரிய தடைதாண்டலுக்கு தோற்றுவதற்காக விண்ணப்பிக்கலாம் என்பதோடு புதிய நியமனதாரிகளும் 1 ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இத்துடன் உள்ள இணைப்பு 2 இல் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு அமைவாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023.11.24 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுத் தபால் மூலம் எனக்கு கிடைப்பதற்கு ஆவன செய்யும்படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

03. விண்ணப்பங்கள் முன்னிலைப்படுத்தப்படும் கடித உறை பின்வருமாறு அமைய வேண்டும். என்பதை தயுவடன் கவனிக்கவும்.

| |
|---|
| முதன்மைத் திறனற்ற ஊழியர்கள், முதன்மை அரைத் திறன் கொண்ட ஊழியர்களின் முதன்மை திறன் கொண்ட ஊழியர்களின் வினைத்திறன் தடைதாண்டல் 2023(1)<br><br>செயலாளர்,<br>கல்வி அமைச்சு<br>இருசுபாய<br>பத்தரமுல்ல |

04. பின்வருமாறு வினைத்திறன் தடைதாண்டல் பூர்த்தி செய்யப்பட்ட பதவியாளர்கள் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை கோரப்படுதல் அவசியம் அல்ல என்பதை மேலும் அறியத்தருகின்றேன்.

- 1 ஆவது வினைத்திறன் தடைதாண்டல் தேர்ச்சிப் பெற்ற 111 ஆம் தரத்தில் உள்ள பதவியாளர்கள்
- 11 ஆவது வினைத்திறன் தடைதாண்டல் தேர்ச்சிப் பெற்ற 11 ஆம் தரத்தில் உள்ள பதவியாளர்கள்
- 111 ஆவது வினைத்திறன் தடைதாண்டல் தேர்ச்சிப் பெற்ற 1 ஆம் தரத்தில் உள்ள பதவியாளர்கள்

05. சேவை உதவியாளர் - ஆய்வுகூடம் மற்றும் சேவை உதவியாளர் - நூலகம் நியமனம் பெற்ற ஊழியர்கள் தங்களது தற்போதைய தரத்திற்குரிய ஏதேனுமொரு வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சை தோற்றி தேர்ச்சி பெற்றிருப்பின் மீண்டும் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை கோரப்படுதல் அவசியம் இல்லை.

ஆர்.பீ.கன்கேவல
மேலதிக செயலாளர் (கல்வி சாரா மற்றும் இணைந்த சேவை)
செயலாளருக்காக

பிரதிகள்

01. முதன்மை ஆணையாளர்/ஆசிரிய கல்வி நிர்வாகம் - த.அ.கொ
02 சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் - த.அ.கொ